முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வராகிமிகி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

10.06.2019, திங்கட்கிழமை

1. **மக்களின் பிறப்பின் தத்துவமும்**
   **மரணம் வெல்லும் சூட்சுமமும்**
   **மக்களுக்கு உணர்த்தி வழிநடத்த**
   **மாதவசியாக வந்த அரங்கனே**
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அருளுவேன் **விகாரி விடை திங்கள்**
   **வரங்களென இருபானேழ் திகதி சோம வாரம்**
   **(விகாரி வருடம் வைகாசி மாதம் 27ம் நாள் 10.06.2019, திங்கட்கிழமை)**
   வழங்கிடுவேன் நித்ய பிரசன்ன ஆசி
3. ஆசியை வராகிமிகி யானும்
   அருளுவேன் உலகோர் நலம்பெற
   ஆசிபெற்று அரங்கன் தொடர்பை
   அகிலத்தார் ஏற்று வருதல் காண
4. காணவே அவரவர் பிறப்பின்
   கருமவினை சூட்சுமம் அறிந்து
   ஞானமெனும் உண்மை ஆன்மீக
   ஞானதேசிகன் நெறி அறிவு கூடி
5. கூடியே தெளிவு பெருகி
   குருமார்க்கம் எனும் மகா சூட்சுமம்
   நாடியே தொடர் ஆசி வழிபாடு
   நாளும் செபதப முறை பெருகி
6. பெருகியே மக்களிடை பரஸ்பர
   பேராற்றலான தயை சக்தி உருவாகி
   குருவருளே திருவருள் எனும்
   குறிப்பும் அறிவு முதிர்வும் கூடி
7. கூடியே ஆசானாக அரங்கன்
   கோடிட்டு காட்டும் தருமநெறி வழி
   நாடியே மக்களெல்லாம் தொடர
   நம்பகம் கூடி அன்னதானம் செய்து வர
8. வருகவே கருமவினை வென்று
   வாழும் காலமே ஞானம் பெற்று
   ஆறுமுக அரங்க ஞானி தயவுபட
   அழியாமை எனும் பேரின்பநிலை அடைவர்
9. அடைவரே பிறப்பின் இலக்கை
   அடைவரே பிறவா பேற்றை
   தடையில்லை அப்பா தரணியோரே
   தவராசனை வணங்கிட பணிந்திட

10. பணிந்திட பதமலர் தொடர்ந்திட
பாவங்கள் சாபங்கள் விலகியே
கனிவு கூடும் உங்களுக்குள்ளே
காண்பர் முருகனை தங்களுக்குள்ளே

11. உள்ளும் புறமாய் அரங்கன் உருவில்
உயர் வேலவன் அருளும் மாட்சிமையை
தெள்ளத் தெளிவாய் உணர்ந்து தேறுவீரே
தெரிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் வராகிமிகி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

கலியுகத்தின் துன்பத்தில் அகப்பட்ட மக்களுக்கு பிறப்பின் தத்துவத்தினை உணர்த்தி மரணத்தை வெல்லும் சூட்சுமத்தையும் மக்களுக்கு உணர்த்தி வழிநடத்தி அவர்களை நன்மக்களாக ஆக்கிடவே மகாதவசியாக உண்மை குருநாதனாக முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 27ம் நாள் 10.06.2019, திங்கட்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே வராகிமிகி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வராகிமிகி.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருள் தொடர்பை உலக மக்களெல்லாம் ஏற்றுக் கொண்டு அரங்கனைப் பின் தொடர்ந்து வர, அவரவருக்கு உண்டான பிறப்பிற்கான கருமவினை ரகசியங்கள் எல்லாம் விளங்கி ஞானம் எனும் உண்மை ஆன்மீக நெறியான அரங்கரின் ஞானநெறியினை ஏற்று ஞான அறிவு பெருகி, குருமார்க்கம் எனப்படும் மகா சூட்சுமம் விளங்கி தொடர்ந்து அரங்கனின் அருளாசிகள் பெருகி ஞானிகள் வழிபாடும் பெருகி தினம்தினம் மறவாமல் ஜெபதபங்கள் பெருகி மக்களிடையே பரஸ்பர உணர்வும் பெருகி பேராற்றல் மிக்க தயவு சக்தியும் பெருகி குருவருளே திருவருள் என்கிற உண்மையும் அறிவு முதிர்வும் அடைந்து சிறப்படைவார்கள்.

உத்தம மகா ஞான குருவாக ஆசானாக ஆறுமுக அரங்கமகா தேசிகனார் சுட்டிக் காட்டுகின்ற தருமத்தின் பாதையை தருமநெறியை அவரவரும் பின்பற்றி அதன் வழியே நடந்தும் அரங்கன் கூறும் தருமநெறியாகிய அன்னதானங்களை சீர்சிறப்பாய் செய்து வர, அவரவரின் கருமவினைகள் எல்லாம் வென்று அவரவரும் வாழும் காலத்திலேயே ஞானம் பெற்று ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தயவினைப் பெற்று அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வு எனும் பேரின்ப நிலையை அடையும் வாய்ப்பையும் பெற்று சிறப்படைவார்கள். பிறந்ததின் நோக்கத்தை அதன் இலக்கை அடைவார்கள். பிறவாப் பெரும் பேற்றை தடையின்றி பெறுவார்கள் அப்பா.

உலக மக்களே உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளை பயபக்தியுடன் பணிந்து வணங்கிட, வணங்கினோரின் பாவங்கள் நீங்கும், சாபங்கள் விலகும். அவரவருள்ளும் கனிவும் இரக்கமும் பெருகும், அவரவருள்ளும் தயவு பெருகியே தயவே வடிவான முருகப்பெருமானையும் தம்முள்ளே உள்ளும் புறமுமாய் ஆறுமுக அரங்கனின் உருவில் காண்பார்கள்.

அகமும் புறமுமாய் அரங்கன் உருவில் முருகப்பெருமானே தோன்றி அருள் செய்யும் மாட்சிமையை தெள்ளத் தெளிவாய் உணர்ந்து தேர்ந்திடுவீர் கலியுக மக்களே எனக் கூறுகிறார் மகான் வராகிமிகி.

–சுபம்–